RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22237

OPEN ACCESS

# கால உருபுகளும் வினையடியும்

ந. சங்கரநாராயணன் [அ, *]

[அ] தமிழ்த்துறை காந்திகிராம கிராமிய, நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்-624302, தமிழ்நாடு, இந்தியா

# Tenses and Root Verbs

N. Shankaranarayanan [a, *]

[a] Department of Tamil, Gandhigram Rural Deemed to be University, Gandhigram-624302, Tamil Nadu, India

* Corresponding Author: shankarma.86@gmail.com

Received: 07-01-2022
Revised: 16-04-2022
Accepted: 20-04-2022
Published: 30-04-2022

Check for updates

## ABSTRACT

Tolkappier does not classify the verb by tense; It is the opinion of many scholars that the department has been classified on the basis. He must have pointed out the time objects if he had classified them on the basis of time. There are many differences of opinion among scholars on the classification of verbs from that time to the present time. The reason for this is that Tolkappiyar did not clearly explain the classification of verbs.This article examines what is the basis of Tolkappiyar's verb classification and why Tolkappiyar did not point out the Tense marker.

**Keywords:** Tolkappier, Tense marker, Verb, Classification

## முன்னுரை

தொல்காப்பியர் வினையைக் காலத்தின் அடிப்படையில் வகைப்படுத்தவில்லை; திணை அடிப்படையிலேயே வகைப்படுத்தியுள்ளார் என்பது பல அறிஞர்களின் கருத்தாக அமைகின்றது. காலத்தின் அடிப்படையில் வகைப்படுத்தியிருந்தால் கால உருபுகளை அவர் சுட்டிச் சென்றிருக்க வேண்டும் என்பர். இக்கட்டுரை தொல்காப்பியரின் வினைப்பாகுபாடு எதனை அடிப்படையாகக் கொண்டது, தொல்காப்பியர் ஏன் கால உருபுகளைச் சுட்டிச்செல்ல வில்லை என்பதை ஆராயும் முகமாக அமைகின்றது.

## வினைச்சொல் பாகுபாடு

வினைச்சொல்லை வகைப்படுத்துவதில் அக்காலம் தொட்டு இக்காலம் வரை அறிஞர்களுக்கிடையே பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொல்காப்பியர் வினையின் பாகுபாடு குறித்துத் தெளிவாக விளக்கிச் செல்லாததே இதற்குக் காரணம் என்பர். தொல்காப்பியர் வினையைத் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரண்டாகப் பாகுபடுத்தியுள்ளதாக அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர் (Innasi, 2009). தொல்காப்பியர் “குறிப்பினும் வினையினும் எனும் நூற்பாவான் இருவகையாகப் பகுத்து அவற்றை உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என முப்பிரிவில் அடக்குகிறார். வகைகளைத் தெரிநிலைவினை, குறிப்புவினையெனப் பிற்காலத்தார் வழங்கினும் தொல்காப்பியர் குறிப்பு, வினை என்ற குறியீடுகளையே வழங்குகிறார். வினை என்பதனைத் தெரிநிலை வினை என்னும் பொருளிலேயே வழங்கியிருத்தல் வேண்டும்” எனக் குறிப்பிடுகின்றார்.

 DOI:10.34256/irjt22237

ச.சுபாஷ்சந்திரபோஷ் "தொல்காப்பியர் வினையைத் திணை அடிப்படையில் பாகுபாடு செய்கின்றார் (Subash Sandra Boss, 2008). கால இடைநிலை பெற்ற தெரிநிலை வினையும் குறிப்பாகக் காலத்தைக் காட்டும் வினையும் (1) உயர்திணை வினை (2) அஃறிணை வினை (3) விரவு வினை என மூன்று நிலைகளில் அடங்கும்" எனக் குறிப்பிடுகின்றார். இக்கருத்தையே உரையாசிரியர்கள் தொடங்கி இக்கால மொழியியல் அறிஞர்கள் வரை பலரும் முன்வைத்துள்ளனர். ஆனால் தொல்காப்பியரின் நூற்பாக்களை நோக்கும்போது காப்பியர் வினையை முதலில் காலத்தின் அடிப்படையிலேயே வகைப்படுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. காப்பியர் வினையியலில் 'நினையுங் காலைக் காலமொடு தோன்றும்' (தொல்.சொல்.198) ல் காலமொடு என உடனிகழ்ச்சிப் பொருளில் குறிப்பிடுகின்றார் (Ganesha Iyer, 2007). அதனை அடுத்து வரும் நூற்பாக்களை நோக்கும்போது

"காலந் தாமே மூன்றென மொழிப
இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றா
வம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளு
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே
குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூம் வினைச்சொ லெல்லா
முயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே"

எனக் குறிப்பிடுகின்றார் (Ganesha Iyer, 2007). காலமொடு என உடனிகழ்ச்சிப் பொருளில் குறிப்பிட்டுப்; பின்பு காலம் மூன்று வகைப்படும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் கருதி அதன் பின்பு குறிப்பு, வினை எனப் பாகுபடுத்தி அவை மூன்று திணைக்கும் உரியனவாகும் எனக் கருதுகிறார்.

இங்குக் காப்பியர் காலத்தின் அடிப்படையில் வினையை வகைப்படுத்தி இருந்தால் காலத்தை உணர்த்தும் உருபுகள் குறித்து அவர் தெளிவாக விளக்கி இருத்தல் வேண்டும். அவ்வாறு விளக்காமல் விட்டுச் சென்றது ஏன்? என்ற வினா எழுகின்றது. அவர் கால உருபுகளைக் குறிப்பிடாமல் சென்றதற்கு இரண்டு வகையான காரணங்களை முன்வைக்கலாம்.

குறிப்பு வினைமுற்றைக் கருத்தில் கொண்டே அவர் கால உருபை விளக்கிச் செல்லாது தவிர்த்திருத்தல் வேண்டும். ஏனெனில் குறிப்பு வினைமுற்றின் அமைப்பானது கால இடைநிலைகளை ஏற்று வருவதில்லை.

எனவே காப்பியர் காலவிகுதி பெற்ற எச்சவடிவங்களையே அவர் வினைச்சொல்லாகக் கருதியிருக்க வேண்டும். எச்சவிகுதி எனும்போது அவர் பெயரெச்சங்களாகக் குறிப்பிடும் செய்த, செய்யும் எனும் வடிவங்களையே வினையின் பகுதியாகக் கொண்டிருக்க வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்ட | + | ஏன் | - | உண்டேன் |
| செல் | + | ஏன் | - | செல்வேன் |

மேற்கண்ட இரு காரணங்களும் எழுவதற்கு இடமாக அமைந்த தொல்காப்பியரின் கருத்துக்கள் சில இங்கு ஆராயப்படுகின்றன.

1. ஏவல் வினைமுற்று குறித்துத் தொல்காப்பியர் தனியே ஏதும் குறிப்பிடவில்லை செய்யாய் எனும் சொல் செய் என வரும் (தொல்.சொல்.450) எனவும், ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும் (தொல்.எழு.211), ஏவல் குறித்த உரையசை மியாவும் (தொல்.எழு.225) எனச் சில நூற்பாக்களில் குறிப்பிட்டிருந்தாலும், அவை ஏவல் பொருளில் வரும் என்று கருதுகின்றாரே தவிர ஏவல் வினை என்று குறிப்பிடவில்லை (Ganesha Iyer, 2007). சங்க இலக்கியத்தில் வினை

வடிவங்கள் குறித்து ஆராய்ந்த "செய்யாய் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் முன்பழந்தமிழ் நூல்களிலும் பின்பழந்தமிழ் நூல்களிலும் உடன்பாட்டு ஏவல் வினையாக அதிகமாகக் காணப்படுகின்றன" எனக் குறிப்பிடுகின்றார் (Agathiyalingam, 2009). எனவே அக்காலத் தமிழில் ஏவல் வினைகள் வினையடிகளாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை அறிய முடிகின்றது. எனவே தொல்காப்பியருக்கு வினையடிச் சொல் குறித்துக் குறிப்பிடவேண்டிய அவசியமில்லாது போனது.

2. ஈ, தா, கொடு, செல், வா என்ற ஒருசில வினையடிகளைக் காப்பியர் எச்சவியலில் குறிப்பிட்டுக் காட்டுவது பின்னாளில் வினையடிச் சொல் குறித்த வளர்ச்சி நிலையைக் காட்டுவதாக அமைகின்றது. மேலும் மேற்கண்ட வினைகளில் சில ஒழுங்கிலா வினைகளாக அமைந்து வருவதும் கவனிக்கத்தக்கது.

தொல்காப்பியர் காலம் மூன்றெனக் குறிப்பிட்டாலும் அவரது எழுத்துக்களிலும் சங்க இலங்கியங்களிலும் நிகழ்காலத்துக்கெனத் தனி வடிவங்கள் ஏதும் காணப்படவில்லை. செய்யும் எனும் வடிவமே மூன்று காலத்திற்கும் பொருந்தி வருமெனக் காப்பியர் குறிப்பிடுகின்றார். பெயரெச்ச வடிவங்களாக அவர் செய்யும், செய்த எனும் இரண்டு வடிவங்களையே குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது.

தொழிற்பெயர் எனக் காப்பியர் குறிப்பிடுவது வினையாலணையும் பெயர் வடிவங்களாகவே காணப்படுவதன் காரணம் இங்குச் சிந்திக்கத் தக்கது. பெயரெச்ச வடிவங்களுடன் இணையும் விகுதி பெற்ற வடிவங்களையே 'தொழில் நிலையொட்டு எனக் குறிப்பிடுகின்றார்.

வினையின் மற்றொரு பெயராகக் 'காலக்கிளவி' எனக் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் பெயர்ச்சொற்கள் சாரியை ஏற்கும் போதும், வேற்றுமை ஏற்கும் போதும் அடையும் மாற்றங்கள் குறித்து விளக்குகிறார். ஆனால் வினைச்சொற்கள் சாரியைகளையோ அல்லது விகுதிகளையோ ஏற்கும் போது அடையும் மாற்றங்கள் குறித்து விளக்காது விட்டுச் செல்கின்றார். அவ்வாறு விளக்காததற்குக் காரணம் கூறும்போது

"உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்

உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்

ஐம்பா லறியம் பண்புதொக மொழியும்

செய்யும் செய்த வென்னும் கிளவியும்

புணரியல் நிலையிடை உணரத் தோன்றா"

செய்யும், செய்த என்ற வடிவத்தையே வினைவடிவாகக் குறிப்பிடுகின்றார் (Ilampuranar, 2004). தொல்காப்பியரின் இக்கருத்துக்களே அவர் கால உருபை வினைச் சொல்லில் இருந்து பிரித்துக் காணவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றன. எனவே கால விகுதி பெற்ற பெயரெச்ச வடிவங்களையே அவர் வினைச்சொல் வடிவாகக் கொண்டிருக்க வேண்டுமென எண்ண இடமளிக்கின்றது. "திராவிட வினைக் காலங்கள் பலவும் வினையின் எச்சவடிவங்களிலிருந்தே தோன்றுகின்றன" எனக் கால்டுவெல் குறிப்பிடுவது மேலும் இக்கருத்திற்கு வலுசேர்க்கும் விதமாக அமைகின்றது (Kovindhan & Rathnam, 2010). காப்பியர் எச்சவியல் (நூற்.427) காலங்களை வினையிலிருந்து பிரித்து நோக்கலாம் எனும் ஒரு சிறுகுறிப்பையே விட்டுச் செல்கின்றார். பின்னால் வந்த நன்னூலாரே வினைச்சொல் வடிவாகக் கால இடைநிலைகளைத் தவிர்த்தமைந்த வினையடியைப் பகுதியெனச் சுட்டுகின்றார். மொழியியல் வளர்ச்சி நம்மிடையே ஏற்பட்ட பின்னரே வினையடிச் சொல் குறித்த ஆய்வுகள் வளர்ந்தன.

## முடிவுரை

குறிப்பு வினைமுற்றைக் கருத்தில் கொண்டே தொல்காப்பியர் கால உருபை விளக்கிச் செல்லாது தவிர்த்திருத்தல் வேண்டும். காப்பியர் வினைச்சொல் வடிவாகக் கால விகுதி பெற்ற

எச்சவடிவங்களையே கருதியிருக்க வேண்டும். எச்ச வடிவங்களே தொல்காப்பியர் வினையடியாகக் கொள்கின்றார். கால உருபுகளைத் தவிர்த்தமைந்த வினையடி குறித்த சிந்தனை தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னால் எழுந்தனவாகும்.

## References


Agathiyalingam, S. (2009) Sanga Tamil – 1, International Institute of Tamil Studies, Chennai, India

Ganesha Iyer, C. (2007) Tholkappiyam Sollathikaram, International Institute of Tamil Studies, Chennai, India

Ilampuranar, (2004) Tholkappiyam Eluthathikaram, Kalaga Veliyedu, Chennai, India

Innasi, S. (2009) Solliyal, Paari Puthagapannai, Chennai, India

Kovindhan, K., Rathnam, K. (2010) Doctor Calduwellin Dravida Mozhigalin Oppilakkanam, Paari Nelaiyam, Chennai, India

Subash Sandra Boss, S. (2008) Vinaipagupattil Echangal, Tamilini Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License